
நாவலப்பிட்டி குயின்ஸ்பெரி தோட்டம்
கெட்டபுலா.

நவநாத சித்தர் சிவாலயத்தின்
திருவருள்மிகு
ஸ்ரீ தேவசேனாதிபதியின்
தேவஸ்தான வெளியீடு

திருப்

# பொன் ஊஞ்சல்

## பதிகமலர்



ஆக்கம்:

**ஸ்ரீ கவிசரஸ் கலாமணி அவர்கள்**

*ஸ்ரீ வாலை சரஸ்வதி அம்பாள் தேவஸ்தானம்*
*காரைநகர்.*

ராஜா நாவலப்பிட்டி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ



## நாவலப்பிட்டி குயின்ஸ்பெரி தோட்டம் - கெட்டபுலா

# ஸ்ரீ நவநாத சித்தர் சிவாலயத்தில்

*திருவருள்மிகு ஸ்ரீ தேவ சேனாதிபதியின் தேவஸ்தான*
*வெளியீடு திருபொன் ஊஞ்சல் பதிக மலர் ஆக்கம்*

**ஸ்ரீ கவி சரஸ்கலாமணி அவர்கள்**

மேற்படி ஆலய பரிபாலன சபையினருக்கும், ஆலய அறங்காவலர் திரு. இரா இராஜகோபால் அவர்களுக்கும் முன்னின்று 1999 - 03 - 31ம் நாள் பங்குனி உத்தரத்திரு உலாவின் பொழுது ஸ்ரீ தேவசேனாதிபதி எம்பெருமானை திரு ஊஞ்சலாட்டி பாராட்டி பாட வைத்து வாழ்த்தி வணங்கி வெளியீடு செய்து வைப்பார்கள். அத்தருணம் அன்பர்கள் அடியார்கள் அனைவரும் வந்து இம் மலரைப் பெற்று படித்துப் பாடி போற்றி எம்பெருமான் திருவருளைப் பெற்றுய்யுமாறு பணிவன்புடன் கேட்டுக் கொள்கின்றோம்.

வணக்கம்

ஆலய பரிபாலன சபையினர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# குயின்ஸ்பெரி
# வெள்ளிமலை ஸ்ரீ தேவசேனாதிபதியே!

ஸ்ரீ தேவசேனாதிபதியே! ஓம் முருகா – எங்கள்
குயின்ஸ்பெரி ராசாவே ஓம் முருகா ஓம்
வெற்றிவடி வேலனே! ஓம் முருகா ஓம் — எங்கள்
விக்கினங்கள் தீர்த்திடவே ஓம் முருகா ஓம்
உச்சிமலை வேலவனே! ஓம் முருகா ஓம்
ஏழைகளைக் காத்திடுவாய் ஓம் முருகா ஓம்
கதிரைமலை வேலவனே ஓம் முருகா ஓம்
காந்ரூபக் கந்தவேலே ஓம் முருகா ஓம்
திருச்செந்தூர் வேலவனே! ஓம் முருகா ஓம்—எங்கள்
திருப்பழனி வேலவனே! ஓம் முருகா ஓம்!
சோலை மலைக்குமரனே! ஓம் முருகா ஓம் எங்கள்
சுப்பிரமணிய நாதனே! ஓம் முருகா ஓம்
சுவாமி மலைக் கந்தனே! ஓம் முருகா ஓம் — எங்கள்
சரவணபவனே! ஓம் முருகா ஓம்
திருத்தணிகை நாதனே! ஓம் முருகா ஓம் — எங்கள்
தீராவினை தீர்த்திடுவாய் ஓம் முருகா ஓம்
பச்சைமயில் மீது வாரார்ய் ஓம் முருகா ஓம் — எங்கள்
பாவ மெல்லாம் தீர்ப்பவனே! ஓம் முருகா ஓம்
வள்ளி தெய்வ மணாளனே! ஓம் முருகா ஓம் — எங்கள்
ஆரமுதே ஆறுமுகா ஓம் முருகா ஓம்
அருந்தமிழை வளர்ப்பவனே ஓம் முருகா.

தற்போதய விலாசம்:

ஸ்ரீ கவிசரஸ் கலாமணி பிரபல சோதிடர்
சித்தவைத்தியாச்சாரி [Dr. K.S.T. துரைத்தியாநேஸ்
கலாநிதி வைத்திய நிலையம்,'
33, சொய்சாகலை வீதி - நாவலப்பிட்டி.]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# ஆசிரியர் முகவுரை

பெற்றதாய் தந்தையரைப்
போற்ற வைத்த
பெருமானைப் பணிந்து
வாழ்த்துகின்றேன்.

நாவலப்பிட்டி குயின்ஸ்பெரித் தோட்டம் ஸ்ரீ நவநாதர் சித்தர்சிாலயத்தில் ஸ்ரீ தேவ சேனாதிபதியின் தேவஸ்தானத்தில் **31-03 1999** பங்குனி மாத உத்தரநட்சத்தில் விசேட அபிஷேகத்துடன் எம்பெருமானிற்கு பெருமைமிக்க அலங்கார ஆராதனைகளுடன் திருபொன்னூஞ்சலாட்டி பேரன்பு மிக்க அன்பர் அடியார்கள் பக்திப் பரவசத்துடன் தங்களுக்கு வேண்டிய வரங்களைப் பெற்றுய்யுவண்ணம் திருவுலா எழுந்தருளி அடியார்களை இரட்சித்து கிருபைபுரிந்து வீற்றிருக்கும் காட்சிகளைக் கண்டு களித்து உலக வாழ்வு சிறோங்க வாழ்வதாகுக. ஸ்ரீ தேவசேனாதிபதியை மண்டாடி வரும். ஷை ஆலய சபையினருக்கும் நயினை வாழ் அறங்காவலர்களான பெருமைமிக்க வாகீச கலாநிதி K. நாகேஸ்வரன் B.A Hon) M.A சிரேஸ்டவிரிவுரையாளர் சப்ரமு அவர்கட்கும் ஆலய தர்மகர்த்தாவான திரு. இராசகோபாலு அவர்கட்கும் எம்மை ஸ்ரீ தேவ சேனாதிபதிக்கு இந்த ஆண்டு ஊஞ்சலாட்டி மகிழ்வித்து அருள் பெற்றுய்யத் திருவருள் கிடைக்க வேண்டுமென்று கேட்கின்ற அன்பர் அடியார்க்குக் கீழ்ப்படிந்து எம் பெருமானிற்கு அவன் அருளாலே அவன் தாழ் பணிந்து என் சிற்றறிவின் சிரமேல் ஸ்ரீ நாகேஸ்வரி அம்பிகையின் பொன்னடியையும் வணங்கி மண்டாடிக் கொண்டு இத்திருப் பொன்னூஞ்சற் பதிகத்தைப் பாடி அச்சேற்றி வெளியிடத் திருவருளானது

அன்பர்கள் அடியாயவர்கள் என்றும் பாடிப் போற்றிப்பணிந்து அப்பன் திருவருள் பெற்றுய்யும் வண்ணம் என்றும் என்சிந்தனையில் வேண்டிச் சங்கிரவாரந்தேயன். மௌவுன உண்ணா விரதராகி இருந்துவரும் அடியேன் எல்லோர்க்கும் வணக்கம். மேலும் இத்திருப் பொன்னூஞ்சல் பதிகத்தினை அச்சேற்ற முயற்சித்த அனபர் அடியார்கட்கும் நன்றி வாழ்துக்கள் மேலும் அணிந்துரைதந்துதவிய பெரியார் திரு. ச. முத்தையாபிள்ளை அவர்கட்கும், திரு. A. K. அம்பலவாணர் அதிபர் அவர்கட்கும் மேற்படி ஆலய பரிபாலன சபையினருக்கும், ராஜா அச்சக அபதிர் திரு. அருள்ராஜ் அவர்கட்கும், சக உதவியாளர் அனைவருக்கும் பங்குனி உத்தர அபிசேக வைபத்தில் கலந்து கொண்டு எம்பெருமான் திருவருள் பெற்றுய்யும் வண்ணம வேண்டிப் போற்றும் படித்துதலாட்டிய பெரியவர் • நா. தில்லைநாதன் அவர்கட்கும் எம் வணக்கம். ஸ்ரீ கவியரஸ் நலாமணி நன்றி கூறி வணங்கி நின்று வாழ்த்துகின்றேன்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ
சிவமயம்



# அணிந்துரை

காரைநகர் ஊரை வசிப்பிடமாகக் கொண்ட மிகு ஸ்ரீ வாலை சரஸ்வதி தேவஸ்தானத்தின் தர்மகர்த்தாவுமாகிய ஸ்ரீ கவி சரஸ் கலாமணி ஆசிரியர் அவர்கள் அம்பிகையின் அருளால் யாழ்ப்பாணத்திலுள்ள கோவில்களைப் பற்றி பலவிதமான இனிய நூல்களை இயற்றிய சைவப் பெரியார் -களின் நன்மதிப்பை பெற்றுள்ளார்

சைவ மக்கள் இலகுவாகப் படித்து பத்திப்பரவசம் அடையும் வண்ணம் கவிநயங்கள் ஒழுங்கே கையாண்டு திருலாளர் ஸ்ரீ கவி சரஸ் காலாமணி அவர்கள் "பேரின்ப ஞானதீபம்" என்னும் மலரைத் தொகுத்துள்ளார். இதன் மூலம் அன்னாரின் பக்தியும், சமயத்தின் மேற்கொண்ட அளவிலாப் பற்றையும் எடுத்துக்காட்டுகின்றது. அன்னாருக்கு அம்பிகையின் அருள் கடாட்ஷம் கிடைக்கப்பெற்று இன்னும் பல நூல்களைப் பாடவேண்டும், நாமும் அதன் மூலம் ஆன்மா ஈடேற்றம்பெற வேண்டும்.

இவர் மேல் மேலும்

வளர்ந்து! நீடூழிவாழ வாழ்த்தி!! அம்பிகை அருள் வேண்டிப் பிரார்த்திக்கின்றேன்.

தொடர்க அன்பரது பணிகள்

A. K. அம்பலவாணர்
அதிபர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ
சிவமயம்

# வாழ்த்துக்கள்

இலைங்கையின் மத்தியமாகாணத்தின் மலைப்பக்கத்தின் மலைக்கோவில் என்றுசொல்க்கூடிய குயின்ஸ்பெரித்தோட்டத்தில் தேயிலை தொழிற்சாலைக்கு மிக அருகில் அமைந்து உள்ளது இத் திருக்கோவில்,

19ம் நூற்றாண்டின் முற்பகுதியில் ஆரம்பமான இத் திருக்கோவில் அற்புதமான சிலை அமைப்பைக் கொண்டது. இதன் மகிமையைப் பற்றி நிறையச் சொல்லலாம்.

இக் கோவிலைத் திருப்பனி செய்து கும்பாபிஷேகம் நடைபெறத் துவங்கி 14 வருடகாலம் தடைபட்டுள்ள காரணம் தெரியாமல் எப்படியோ பால முருகன் அடியேனை பிடித்து (என் தலையில்) தலைமையில் கும்பாபிஷேகம் நடத்திவைக்க அனுப்பினார். அப்போது அடியவனுக்கும் மற்றவர்களுக்கும் தெரிய வந்தது. கோவிலில் அமர்ந்து அருள்பாளித்தது. பால சுப்ரமணிய தேவ சேனாதிபதி உருவச்சிலை என்று,

இலங்கையில் வேறு எங்கும் இருப்பதாகத் தெரியவில்லை இங்கே சிறப்புற்று விளங்குவதற்குக் காரணம் பல சித்தர்கள் வருகை புரிந்துள்ளனர் கடைசியில் நவநாத சித்தர் சமாதியாகி சிவனாகி விட்ட திருத்தலமாகும். இப் பெயர் பெற்ற திருக்கோவிலுக்கு திரு சிவகலா சரஸ்வதி அவர்கள் இயற்றியுள்ள ஊஞ்சல் பாட்டு மேலும் சிறப்பித்து விளங்கும் என்பதில் ஐயமில்லை, அவருடைய பணி மேலும் சிறப்புற என் வாழ்த்துக்கள்.

இங்ஙனம்

**திரு. ச. முத்தையா பிள்ளை**

தலைவர்:
ஸ்ரீ முத்துமாரியம்பாள் தேவஸ்தானம்
நாவலப்பிட்டி.

23-11-98

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# குயின்ஸ்பெரி தேவன் ஆட்டக்காவடி

கூடிக்கூடி ஆடிவரும் பாட்டுக் காவடி
தேடித்தேடி ஒலி ஏந்தும் கூட்டுக்காவடி
நாதற் காவடி எங்கள் ஞானக்காவடி
வேதக்காவடி எங்கள் வித்தைக் காவடி
முத்துக் காவடி முருகன் சித்துக் காவடி
பக்திக் காவடி எங்கள் பால் காவடி
தங்கக் காவடி எங்கள் சங்கக் காவடி
எங்கள் காவடி சொந்த முருகன் காவடி
பாற் காவடி எங்கள் தேர்க் காவடி
பத்யெருதி விளையாடும் மயில் காவடி
பத்தருள்ளம் ஓடுங்கவைக்கும் பறவைக் காவடி
வருத்த மனம் உருகவைக்கும் செடிற் காவடி
காவடியாய் காவடி வெற்றி வேலனுக்குக் காவடி
காவடியாம் காவடி எங்கள் கந்தனுக்கு காவடி
இயம்மது இன்பம் தரும் இன்பக் காவடி
வேல் முருகன் ஆறுமுகன் அன்னக் காவடி
யவல் முருகன் மனதில டும் மர்மக் காவடி
குயின்ஸ்பெரி தேவனுக்கு தேர்க் காவடி
தேயிலைமலை வேலனுக்கு சந்தனக் காவடி
செல்வன் கதிர்காமனுக்கு சிற்பக் காவடி
எல்லையில்லா இன்பமூட்டும் ஞானக்காவடி
ஆறுபடை தேவனுக்கு ஆட்டக் காவடி
வீறுகொண்ட வேலனுக்கு வேல் காவடி
சிங்கார வேலனுக்கு சேவற் காவடி
பங்குகொண்ட பாலனுக்கு பாற் காவடி
பச்சைமலை வேலனுக்கு பளக்காவடி
அச்சகம் தீர்க்கும் முருகனுக்கு ஆட்டக் காவடி
பாட்டுக் காவடி எங்கள் நாட்டுக் காவடி
கட்டுக் காவடி எங்கள் குமரன் காவடி
கற்றுக் காவடி எங்கள் சுழன்றாடும் காவடி
தேயிலைத் தோட்டமெங்கும் தேவன் காவடி
குயின்ஸ்பெரி மலையாடும் மயில் காவடி
பஞ்சவர்ண சோதிமயில் பச்சைக் காவடி
அஞ்சா நெஞ்சர் ஆணவத்தை அடக்கும காவடி
கூட்டுக் காவடி எங்கள் தோட்டக் காவடி
பாட்டுக் காவடி எங்கள் பாஷர் காவடி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ
சிவமயம்

# காப்பு

## அகவற்பா

சிவபெருமானே! மும்மூர்த்தி ஆனவன்
சிவன் முதன் மைந்தன் சிவகாமிபுதல்வன்
பவப் பிணி அறுக்கும் அங்குச பாசன்
பலமுகமூர்த்த வடிவினன் ஒருமுகமூர்த்தமானவன்
கலைவல்லுனர்க்கு கருணை தருபவன்
இவனின் கழல்களை என்றும் தொழுவோம்
கவலைகள் தீர்க்கமுன்வரக் கணபதியே!

★—★

## விநாயகர் துதி

## திருப்பள்ளி எழுர்ச்சி

போற்றினோம் பூவுலகாண் டருள் சுரக்கும் தேவா
புன்மைக எகற்றியாள் பூங்கழற் பரனே!
ஏற்றினோம் உமைசிவன் பாலனே இரங்கி
எமக்கருள் புரியஇப் பிறப்பிற் கண்டுய்யத்
தோற்றிடும் ஓங்கார வடிவுடையோனைத்
தோத்தரித் தென்றும் பல்லாண்டுவாழ்த்திச்
சாற்றிடும் கீதங்கள்பாடித் தொழுதோம்
சஞ்சலந்தீர்! பள்ளி எழுந்தருளாயே!

—✱—

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வித்தக வினாயகனே

## விருத்தம்

சித்தமெல்லா மோகிங்கிச் சிவனடிசேரவே!
சிந்தைகலங்கி நொந்து ஏங்கியும் வாடி
எத்தனையோ காலமுதல் ஏனிந்தச் சோதனை
என்னிடர் தீர்க்கவா இதுவேளைவந்தே
உத்தமலோலனே! சிவனுமைப்பாலனே!
உலகமெல்லாம் நிறைந்த ஓங்காரமூர்த்தியே
வித்தக விநாயகனே! வேதமுகற்பெருமானே!
விரைந்தோடி வந்தெனைக் கார்க்கவே.

*—*

# ஸ்ரீ வாலை சரஸ்வதி அம்பாள்

## அகவற்பா

சொல்லினுக் கரசியாய்ச் சுகித்திருப் பாய்நீ
எல்லை இல்லா ஒலி ஒளி எங்கெங் குமாய்
பல்லுயிராகிப் பரந்த வான்வெழி எலாம்
நல்ஒளி வீசிடும் நாதவோங் காரியாய்
உலகெல்லாம் நிறைந்த உண்மை வடிவுமாய்
பலபல வாகிப் பரந்த வைம் பூதமாய்

சத்திசிவ மாகியே! சராசரம் எல்லாம்
எத்திக்கும் சோதியாய் எங்கும் பூரணமாய்
நிறைந்த நிர்மல நீழ்ஒளிச் சுடராய்
மறைபுகழ் கருவெலாம் மாதவத் தினர்க்கு
சத்தியந் தவறாதவர்க் கருள் சுரந்தும்
பத்தியும் பெருகிப் பலவுருக் காட்டியும்
நவக்கோ ளெல்லாம் நன்நயம் என்றே
இவர்க் கெல்லாம்மே லண்டங்கள் பலவாய்
நிற்பாயுலகிலும் நின் புகழ் கூறிட
கற்றோர் மற்றோர் கலந்து புகழ்ந்திட
விஞ்ஞான முணர்ந்தோர் விரிந்துபரந்திட
மெஞ்ஞான முற்றோர் உன்னடி போற்றிட
வைத்தே வரம்பல கொடுத்து வளர்ப்பாய்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வித்தைகள் வளர்க்கும் வித்தகி ஆனாய்
வேதங்கள் பலவாய் விளக்கினாய் நீயே!
பாதந் தொழுதோர்க்குன் பக்குவம் காட்டி
ஞானம் வளர்ப்பாய் ஞானியர்க் கென்றும்
மோனத்துள் ஆக்கியுன் மகிமைகள் கூட்டி
அறம் பொருள் இன்பவீ டெலாம் காட்டி
சிறந்திட வைப்பாய் மலரடி சேரென
மாயவுல கையும் மறக்கவும் வைப்பாய்
காயம் பொய்யெனக் காட்டி யுதவி
கண்மணி நீயே கருவுருவும் நீயாய்
மன்னுயிர் ஆகியும் மாதாவும் ஆகினாய்
என்னருட் தாயாய்ப் பெற்றவள் நீயே!
நன்மைக்கும் தீமைக்கும் நடுவு மானாய்
என்னைக் காத்தருள் ஏகநாய கியே
பன்மலர் இட்டுப் பணிந்துய்ய வைத்திடு
உன்னடி மறவா உணர்ச்சியைத் தந்திடு
பொன்னடி சேர்த்தருள் பராபரன் உமையே!
வண்ண வடிவே வாலாம் பிகையே!
கண்ணார் அமுதே கண்மணி ஒளியே!
விண்வெளி எல்லாம் விளங்கிடும் தாயே!
உண்மெய்க் குயிராய் உணவில் இருப்பாய்
அறிவிற் கலந்து அருள்ஞானம் ஊட்டிநற்
நெறிஎலாம் காட்டி நிலைத்திருந் தருளும்
என்னுள மனோன்மணித் தாயே சரணம்
என்றும் மறவாச் சிந்தையுள் ஆவாய்
இம்மையும் மறுமையும் இதமாய் ஆக்கும்
அம்மை தாயே அடியேன் சரணம்
சரணம் சரணம் ஸ்ரீவாலை சரஸியே!
சரணம் சரணம் சற்குரு நீயாய்
வந்தாள் சரணம் தாயே!
சந்தன குங்குமத் திருவே சரணம்.

**ஆக்கம்: ஸ்ரீ கவி சர்ஸ்கலாமணி**
**ஸ்ரீ வாலை சரஸ்வதி அம்பாள் தேவஸ்தானம்**
காரைநகர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மஹா மிருத்யுஞ்ஜய மந்திரம்

ஓம் த்ர் யம்பகம் யஜாமஹே
ஸுகந்திம் புஷ்டிவர்த நம்
உர்வாரு கமிய பந்தநம்!
ம்ரு த்யோர்முக்ஷீயமா அம்ருநாத்!

கருத்து விளக்கம்:

தெய்வ மணம் கமழும் திருமேனியை உடையவரும் தமது பக்தர்களை நோயின்றி ஆரோக்கியத்தோடு பெருத்துவளரச் செய்கிறவரும் சூரியன், சந்திரன், அக்கினி ஆகிய மூன்று சுடர்களையும் கண்களாக உடையவருமான எமது உபாசனா மூர்த்தி ஆகிய கடவுளிடம் எமது உடலையும் உயிரையும் அர்ப்பணம் செய்கின்றோம்; வெள்ளிப் பழமானது தன் கொடியினின்றும் விடுவிக்கப் படுகின்றதுபோல, காலனுடைய கட்டில் நின்றும் நான் விடுவிக்கப் படுவேனாக! என்னை அந்தக் கடவுள் இறவாமல் இருக்கச் செய்வாராக; என்பது கருத்து.

—※—

ஸ்ரீகவி சரஸ்கலாமணி ஆக்கிய விநாயகர்
திருப்பள்ளி எழுச்சி பதிகம் பத்தில் உள்ள முதலாவது
பாடல் மற்றப் பாடல்களை மறுபுஸ்தகத்தில்
பார்க்கலாம்.

எம்முடன் தொடர்பு கொள்ளுங்கள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நாவலப்பிட்டி — குயின்ஸ்பெரி – கெட்டபுலா

## ஸ்ரீ நவநாதசித்தர் சிவாலயம்

## ஸ்ரீ தேவசேனாதிபதி

# திருப்பொன் ஊஞ்சல் பதிகம்

### கணபதி காப்பு

திருவருள் உமைசிவனார் நெற்றிக் கண்ணில்
திகழ் சரவணப் பொய்கையில் வந்தோனைப்
பெருங்காதலுடன் என்றும் போற்றி வாழ்த்திப்
பூதலத்தோர் வினைகள் தீர்த்துய்யவும்
கருணையுடன் உமைமுன்னிருத்தி ஊஞ்சல் பாடச்
குயின்ஸ்பெரி நவநாதர் சித்தராலயத் துறை
அருட்பெரும் ஆனைமுகத் தைங்கரனே!
ஆதரித் தெம்மகத்திருந்து காத்தருளவே,

### பதிகம்

சீரோங்கும் நான்மறைகள் தூண்களாகச்
சிறந்தோங்கும் சிவாகமங்கள் விட்டமாகப்
பேரோங்கு மடியருள மெலாங் கயிறநாகப்
பேரின்பமுறு சடாச்சரமே பலமையாகத்
தாரோங்கு குயின்ஸ்பெரித் தோட்டம் மேவும்
திருவருள் சேர்நவநாத சித்தர் போற்றும்
தேரோங்கு மூஞ்சலினை அமைத்தோமன்பர்
ஸ்ரீ தேவசேனாதிபதியே! ஆடீருஞ்சல்.

2

சிவன் நெற்றிக் கண்ணிருந்து வந்தசோதி
சரவணப் பொய்கையிற் தவழ்ந்தவனே!
குவலையத் தோரிடர் தீர்க்கவந்த பாலா
கார்த்திகை மாதரால் வளர்ந்த சீலா
தவஞான மூட்டும் குயின்ஸ்பெரித் தோட்டத்தான
திருமாலின் மருகனே! ஆறுமுகனே யெம்
நவநாதர் சித்தர் போற்றியருள் பெற்றனரே!
ஸ்ரீ தேவ சேனாதிபதியே! ஆடீருஞ்சல்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 3

வாசமிகு சந்தனம் குங்குமம் கஸ்தூரியும்
வழமான அபிசேக திரவியங்களுடனே
பாசமொடு பாலிழனீர் தேன்பஞ்சாமிர்தமுடன்
பன்னீர் அத்தர் நெய்சேர்த் தபிஷேகித்தோம்
ஆசையுடன் பொற்பட்டும் சாற்றி அலங்கரித்துக்
கருதரிய பூவாரம் பொன்னாரம் சூட்டிப் பொட்டுமிட்டு
நேசமுறு பங்கை யாசனத் துறைசரவணபவனே!
ஸ்ரீ தேவ சேனாதிபதியே! ஆடீரூஞ்சல்

## 4

பக்தரொடு சித்தர்குழாம் பூமாரி பெய்து
பாங்குடனே கொடி குடைகளால வட்டமேய்ந்த
சத்திமிகு உலவுபூங்கவரிவீசி எங்குமாலச்
சிறப்புடனே சப்தகன்யரும் நடனமாட
மத்தள கைத்தாளமுடன் மங்களவாத்தியங்களார்ப்ப
மனதாரவேதியரும் மலர்கள் தூவித் தீபமேந்த
எத்திக்கும் புகழ்பரவு குயின்ஸ்பெரித் தோட்டத்து
ஸ்ரீ தேவ சேனாதிபதியே! ஆடீரூஞ்சல்

## 5

எங்கள் பெருமானே வள்ளி தெய்வானையுடன்
எழிலோங்கு சரவணபவ குகனே ஐயா
பங்கமுறு தேவரைக் காக்கவந்த முருகா
பகைகொண்ட சூரனை அடக்கி என்றும்
மங்களமா மயிலேறிச் சேவற் கொடியுமேந்தி
மாதவத் தேவரைக் காக்கவந்த வெற்றிவேலா
தங்கு குயின்ஸ்பெரித் தோட்டம் வந்த சிவகுரு
ஸ்ரீ தேவ சேனாதிபதியே! ஆடீரூஞ்சல்

## 6

அன்பருக்கன்பனே! அடியவருளத் துளேயான
அற்புதச் சத்திவேல் பெற்றுவந்த வீரா
இன்பமயிலேறி ஆறு படைவீடெங்கு மாகியே
இகமெல்லாம் பரவிநின்றாண் டருள் புரிந்தும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

துன்புற்ற தேவரைச் சிறைமீட்ட செல்வா
துணையாகிக் குயின்ஸ்பெரித் தோட்டம் வந்தும்
பன்னயஞ்சேர் நவநாத சித்தருக் கருளீட்டிவந்த
ஸ்ரீதேவ சேனாதிபதியே! ஆடீர்ரூஞ்சல்

7

கருணை மழைபொழிகின்ற கார்த்திகேயா
காந்த மலைச்சோதியே யென் கற்பகத்தரசே!
பெருங்காத லுற்றுலையும் எம்மைக்காத்திடும்.
பேரொளிச் சிவஞானக் கொழுந்தனே
பெருமிடர்கள் தீர்த்தருள்வாய் அப்பனே!
வளமோங்கு குயின்ஸ்பெரித் தோட்டம் வந்த
திருச்செந்தமிழ் வடிவஞான குருவே!
ஸ்ரீ தேவசேனாதிபதியே! ஆடீரூஞ்சல்

8

கந்தப் புராணம் காட்டும் கருப்பெருளேஞானக்
குருபரனே! ஆறுமுகவடிவேலனே எம்
பந்த பாசங்களைகற்றிப் பாருலகி லெமையாண்டு
பலகலைகளூட்டும் பரஞ்சோதி இங்குவந்து
சிந்தனைக் குள்ளாகிச் சீர்கூட்டும் உலகிலாகிச்
சிறப்போங்கக் குயின்ஸ்பெரித் தோட்டம் வந்தாய்
சந்ததமும் பொற்கழல் மறவோமையா சண்முனே!
ஸ்ரீ தேவ சேனாதிபதியே! ஆடீரூஞ்சல்

9

பிரமனைக் குட்டிச் சிறையில் இட்டாயன்று
பரமனுக் குபதேசம் செய்த முருகா?
தரமிலா தாணவமிஞ்சிய சூரனைப் பிழந்து
திருவழகு மயில் மீதேறிச்சேவற் கொடியுமேந்தி
கரமீது சத்திவேல் பெற்றெமைக் காத்தமர்ந்தாய்
கந்தரனு பூதி கூறும் ஞானப்பரஞ்சுடரே!
வரமுதவு குயின்ஸ்பெரித் தோட்டம் வந்தவீர
ஸ்ரீ தேவ சேனாதிபதியே ஆடீரூஞ்சல்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிந்தித்தே நவநாதசித்தர் ஏந்தி வாழ்ந்த
செல்வனே! குயின்ஸ்பெரித் தோட்டம் வந்தாய்
வந்தனை செய்யும் அடியாரைக் காக்குமுருகா
வழர்சோலை மயிலாடச் சேவல் கூவச்
சந்ததமும் சரஸ்கலாமணியன் வாழ்த்தும்
சிவசுப்பிரமணியனே! போற்றி போற்றி
முந்திவரு யானைமுகன் சகோதரனே ஞான
ஸ்ரீ தேவ சேனாதிபதியே! ஆடீருசல்

## போற்றி

செண்பக மரநிழலிலாடும் ஸ்ரீ நாகபூஷணியே!
சிந்தனைக் குள்வளர் ஓங்காரியே! போற்றி
எண்ணரிய விக்கினங்கள் தீர்விநாயகரே போற்றி
எங்களை ஆட்கொள்ளும் இறைவனே போற்றி
உண்மை யொடு குயின்ஸ்பெரிந் தோட்டம் வந்த
உத்தம நவநாதர் சித்தராலயத்து மேவும்
கண்கண்ட கதிரைமலைக் கந்தனே! என்றும்
காத்தருள் சிவஞான சீலனே! போற்றி போற்றி

## வாழி

நான்மறை அறங்களோங்க வாழி
தேன்தமிழ் ஞானமது ஓங்க வாழி
மேன்மை கொள் சைவநீதி துலங்க வாழி
ஆன்ம நேய அன்பருளம் வாழ்க வாழி

## எச்சரிக்கை

சோதித் தெமை ஆழ்பவனே! எச்சரிக்கை
ஆதிப் பரம் பொரு ள எச்சரிக்கை
ஓதி அருளுதவும் அப்பனே எச்சரிக்கை
சாதி மதபேத மில்லானே! எச்சரிக்கை.

## பராக்கு

நற்குருவே! நவசக்தி பாலாபராக்கு
கற்பக முன்முதலே பாராய்பராக்கு
அற்புத அலங்கார ரூபா பராக்கு
சிற்பர சிவசக்தி வேலனே! பாராய்பராக்கு.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## லாலி

லாலி லாலி லாலி லாலியே!
லாலி லாலி லாலி லாலியே!

சிவ சத்திமைந்தருக்கு லாலி லாலி
சிவ சுப்பிரமணியருக்கே லாலி லாலி
நவநாத சித்தரடியார்க்கு லாலி லாலி
தவ முயர்த்தும் சத்தியர்க்கும் லாலி லாலி

## மங்களம்

மங்களம் செந்தமிழ் தாயார்க்கும் மங்களம்
மங்களம் ஞானகணபதிக்கும் மங்களம்
மங்களம் சரவபணவர்கும் மங்களம்
மங்களம் ஜெகசோதி அடியார்கும் மங்களம்

★ ——— ★

வான்முகில் வலாது பெய்க
மலிவளஞ் சிறக்க மன்னன்
கோன்முறை அரசு செய்க
குறைவிலா துயிர்கள் வாழ்க
நான்மறை அறங்கள் ஓங்க
நற்றவம் வேள்வி மல்க
மேன்மைகொள் சைவ நீதி
விளங்குக உலகம் எல்லாம்

சுபம்

ஆக்கம்:

ஸ்ரீகவி சரஸ்கலாமணி
சுக்கிரவார மௌனவுண உண்ணாவிரதர்,
ஸ்ரீ வாலை சரஸ்வதி அம்பாள் தேவஸ்தானம்,
காரை நகர்,

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஸ்ரீ ஓம் கணபதியே நம

## ஸ்ரீ சரவணபவனே வா வா

குயின்ஸ்பெரித் தோட்டம் வந்த
குருபரனே ஐயா!
குயில்கூவும் சோலை எங்கும்
குதித்தாடுமுருகா.
அயில் வேலைத் தாங்கி வரும்
அப்பனே! வா, வா,
மயில் மீதே ஆடிவரும்
மன்மதனே! ஐயா
பச்சை மலை! பவள மலை! மீதே!
பல நடனம் ஆடிவருவாயே
இச்சையெலாம் தீர்ப்பவனே வா! வா!
இன்பவள்ளி தெய்வ யானையோடு வா, வா,
அச்சந் தீர்த்தை மையாழ வேண்டும்
அன்பரடி யாரைக் காக்க வா, வா,
இச்சமயம் இடர்தீர்க்க வா, வா,
ஸ்ரீ தேவ சரவணபவகுகனே ஐயா

— ஸ்ரீ கவிசரஸ்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நம் தாயார் கலைவாணிக்குத்

## தேவாரம்

முக்னியும் முன்பாலும் தேனமுதுடனே சர்க்கரையும்
எக்காலுமுந் தந்தென்னை ஏந்திவழர்த்த தாயாரே!
தக்கதொரு வாழ்வுதவி தமியேனைக் காத்தாளாயோ!
மக்களைநீ மனதார வைப்பதும் உந்தன் செயலிலையோ!

2

பாலூட்டும் காலத்தில் பகுத்தறிவை ஊட்டிலையேன்
நூலூட்டி வைப்பதற்கு குழந்தையென்றோ அறிந்தன்னை
தாலாட்டி மடிஏந்தி பசிதீர்த்தும் பார்த்தணைத்தாய்
தாலாட்டித் தாலாட்டித் தேன்தமிழை ஊட்டிவைத்தாய்

3

எனக்கென் தெரியும் அப்போது
யானும் உந்தன் குழந்தை என
எனக்கே தெரியா தாக்கியதார்என்றே
தெரியாதென் விதியோ?
தனக்கே எல்லாம் தெரிந்திருந்தும்
தானேஎன்னை வாழ்வித்தாய்
தனக்கே எந்தன் உடல்பொருளாவி
அத்தனையும் உமக்கேதான்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

4

சின்ன வயதில் செல்லம தாய்ச்
சேர்ந்தும் கொஞ்சிவழர்த் தாயே
அன்றே எந்தன் மனந் திருத்திப்
பழக்காதென்ன தாயாரே!
என் மனத்தாசை தெரிந்திருந்தும்
நீ பற்பல பண்டங்கள் தந்தவளே!
அன்னமேயுன் குணம் தந்தும்
அறிவைப் புகுத்தினாயிலையே?

5

சொன்ன மொழி தட்டினனோ?
என்னருமைத் தாயாரே! உன்
வன்ன இடைமடிஏற்றி
வடியேற்கும் மதி வழங்கலையே?
பொன்னடியை இக்காலம் பொருந்த
வைத்தெனை யாளாயோ?
முன்னவளே! என்பிழைகள் முழுதும்
பொறுத்தருள் அம்மாவே!

6

கண்கண்ட தெய்வமென
அறிவாளர் உனைக்காட்ட
விண் நிறைந்த உருவஉனை விஞ்ஞானர்
கண்டறி வாரோ?
பண்கண்ட மெஞ்ஞானர் படிப்படி
ஏறி உனைக்காண்பார்
எண்ணெழுத்தை விளக்காமல்
எனையிங்கேனோ? மயக்கிவிட்டாய்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 7

அம்மா வுந்தன் சொற் தட்டி
வழர்ந்தேனோ என்மதி கெட்டு
இம்மானிலத்தே இகழ்ந்து என்னை
இன்றேன் பழிக்க விடுவாயோ?
சும்மா சிரித்து வளர்த்தாசை
செல்லப்பிள்ளை ஆக்கினையே?
எம்மானிலத்தில் இனியுன்னை
எங்கே கண்டு முய்வேனாய்.

## 8

மன்னே! மணியே! மாதாயே!
மனதாரச் செய்இந்நாளில்
முன்னாட் செய்தபிழை பொறுத்து
முன்வந்தென்னை ஆளம்மா
கண்ணுள் உயிராய் நீநின்றே
கருத்தில் இருந்து வளிகாட்டும்
என்றும் என்மனதாற்றுவை நீ
ஏந்தி அடக்கி ஆண்டிடம்மா.

## 9

மாதா உள்மெய் உருக்காட்டி மனதை
உனதே ஆக்கிடம்மா
வேதா வேதாந்த வித்தகியே!
வித்தை எல்லாம் உணர்த்திடம்மா.
மாதாதாயே! மனதிரங்கி
மதியணிமுடியிடை சேரம்மா?
தாதாமுந்தன் குருமாரின்
ஞானமுணர்த்திக் காத்திடுவாய்!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பத்தி மிகுதி ஆனதினால் பதியில்
வந்தேன் உன்னாலே
சத்திஉண்டு இங்கென்றார் சத்தியமுன்னடி
சரணம் அம்மா
நித்தம் உந்தன் நினைவதனால்
உருகிவாடித் தவிக்கின்றேன்.
சுத்திக் கதறிடவையாது காத்து
வந்தாள் மாதாவே!

ஸ்ரீ கவிசரஸ் கலாமணி

—●—

சுக்கிரவார மௌவுன உண்ணாவிரதர்

இந்த தேவாரப் பதிகத்தைப் பாலர்களும் பெரியோர்களும் தினமும் பாடிப் போற்றி வருவோமாயின் கல்வி ஞானமும் செல்வமும் பொறுமையும் அன்பும் அருளும் தக்கதோர் பூவுலக வாழ்க்கையும் அமைந்து, புத்திரச் செல்வமும் பெற்று பேரின்பமும் பெற்று வாழ்வார்கள் என்பது திண்ணம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# திருவருள்மிகு ஸ்ரீ வாலை சரஸ்வதி அம்பிகை தேவஸ்தானம்

பிரம்மரிஷி ஆச்சிரமம் — காரைநகர்.

## ஸ்ரீகவி சரஸ்கலாமணி அவர்கள் யாத்தருளிய வெளியீடுகள்:

1. ஸ்ரீ வாலை சரஸ்வதி அம்பாள் தோத்திரபாமாலை (தொகுப்பு
2 நயினாதீவு ஸ்ரீ நாகபூசனி அம்பாள் பத்திரசப் பாமாலை
3. இணுவில்- ஸ்ரீ பரராச சேகரப்பிள்ளையார் இரத்தின
-மணிமாலை
4. காரைநகர் தோப்புக்காடு- ஸ்ரீ மூத்துமாரி அம்மன் திருவூஞ்சல்
-பதிகம்
5. காரைநகர்- ஸ்ரீ சுப்பரமணியப் பெருமான் கிள்ளை விடுதூது
6. வியாவில் காரைநகர்- ஐயனார் திருப்பொன்னூஞ்சல் பதிகம்
7. எங்கும் நிறைந்த- ஸ்ரீ சுப்பரமணியப் பெருமாள திருப்பதிகம்
8. காரைநகர் ஸ்ரீ முத்துமாரி அம்மன் திருப்பதிகம்
9. நுணிபுரம் ஊர்காவற்றுறை திருப்பொன் ஊஞ்சல் பாமாலை
10. சிவன் ஊர்காவற்றுறை அன்பருளப் பாமாலை
11. இராந் தோட்டம் காரைநகர்
ஸ்ரீ இராசராசேஸ்வரி அம்மன் திருப்பொன் பாமாலை
12. நீலிப்பந்தனை காரைநகர் - துர்க்கை அம்மன் பதிகம்
ஷெ பேரின்பக் காதல் - திருப்பொன் ஊஞ்சல்
13. ஸ்ரீ முத்துமாரி அம்பாள் மயில் விடுதூது - காரைநகர்
14. ஸ்ரீ வாலை சரஸ்வதி அம்பாள் - கவிப்பூந்துணர்
15. வட்டுக்கோட்டை சின்னக் கதிர்காமன் பேரில்
ஸ்ரீ முருகப்பெருமாள பதிகம
பேரிம்பக் காதற் சிந்து — பேரிம்பக் கும்மி
சீர்த்தனைகள் நாமவழிகள்
16. காரைநகர் ஸ்ரீ வாலை சரஸ்வதி அம்பாள் பேரில்
நாமகள றிசை ஞானப் பொன் ஏடு
17. கிராஞ்சி பட்டியன் மோட்டை
ஸ்ரீ நாகபூசனி அம்பாள் பாமாலை அஞ்சல்
கிராஞ்சி சிவபுரம் ஸ்ரீ துர்க்கை அம்மன்
பஜனைப் பாமாலை அஞ்சல்
19. கிராஞ்சி சிவபுரம் - சிவன் ஊஞ்சற் பாமாலை அச்சில்
— ஸ்ரீ முருகன் பஜனைப்பாமாலை ,,
21. வவுனியா தேடிவந்த பிள்ளையார் திருப்பதிகம் ,,
22. அக்கரப்பத்தனை ஸ்ரீ மகாமுத்துமாரி அம்மன்
திருப்பொன் ஊஞ்சல் பதிகம்
23. பேரின்பஞான தீபம் பிள்ளையார் — காரைநகர்
24. நோர்வூட் சித்தி விநாயகர் திருப்பொன் ஊஞ்சல்
25. கற்றன் பொன்னகர் சித்தி விநாயகர் திருப்பொன் ஊஞ்சல்
26. செல்வக் கதிர்காம மாணிக்கப்பிள்ளையார்
திப்பொன் ஊஞ்சல் பதிகம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org